ශ්‍රී ලංකා සංවර්ධන පරිපාලන ආයතනය
இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்
SRI LANKA INSTITUTE OF DEVELOPMENT ADMINISTRATION
(Ministry of Public Administration, Home Affairs, Provincial Councils & Local Government)

තැ.පෙ. / த.பெ.இ / P.O. Box 1123

28/10, මලලසේකර මාවත, කොළඹ 07, ශ්‍රී ලංකාව
28/10, மலலசேகர மாவத்தை, கொழும்பு 07, இலங்கை
28/10, Malalasekara Mawatha, Colombo 07, Sri Lanka

Telephone : 94 11 5980200
Fax : 94 11 2584406
E-mail : mail@slida.gov.lk
Web : www.slida.lk

**அனைத்து பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்.**

அபிவிருத்தி உத்தியோகத்தர் **I, II, III** வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை 2024

அபிவிருத்தி உத்தியோகத்தர் I, II, III வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைகள் ஜுன் 30, 2024 ஞாயிற்றுக்கிழமை நடாத்த உத்தேசிக்கப்பட்டு உள்ளதுடன், இதற்கு 52,756 விண்ணப்பதாரர்கள் விண்ணப்பித்துள்ளனர். இந்தப் பரீட்சை நாடளாவிய ரீதியில் 353 நிலையங்களில் நடைபெறவுள்ளது.

விண்ணப்பதாரர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டை மின்னஞ்சல் மூலம் வழங்கும் பணி தற்போது நிறைவடைந்துள்ளது. இதுவரை தமது தனிப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகள் இருப்பின், இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் இணையத்தளமான www.slida.lk ஊடாக தமது தேசிய அடையாள அட்டை இலக்கத்தை உள்ளிட்டு அனுமதி அட்டையைப் பதிவிறக்கம் செய்யும் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பிக்கும் போது விண்ணப்பதாரர்களின் கவனயீனமான தவறுகள் காரணமாக, அவர்கள் தோற்றுவதற்கு எதிர்பார்க்கப்படும் பாடங்கள் உரிய அனுமதி அட்டையில் சேர்க்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், மேலும் குறித்த பாடங்களை உள்ளடக்குவதற்கான விண்ணப்பதாரர்களின் கோரிக்கையை கருத்தில் கொண்டு அதற்கு தேவையான வசதிகளை வழங்குவதற்கு ஒருங்கிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் ஒத்துழைப்பின் கீழ் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம் தீர்மானித்துள்ளது.

அதன் பிரகாரம், பரீட்சை அனுமதி அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களுக்கு மேலதிகமாக ஒரு பாடம்/பாடங்களை பரீட்சை அனுமதி அட்டையில் சேர்க்க விரும்பும் விண்ணப்பதாரர்களுக்கு, இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் இணையத்தளம் மற்றும் உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்தின் ஊடாக, திருத்தம் செய்வதற்கான வழிமுறைகள் விரைவில் வழங்கப்படும். சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரர்கள் குறித்த அறிவுறுத்தல்களுக்கு கவனம் செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திருத்தத்தைத் தவிர, பரீட்சை அனுமதி அட்டை தொடர்பாக வேறு எந்தத் திருத்தங்களும் மேற்கொள்ளப்பட மாட்டாது.

பணிப்பாளர் நாயகம்
இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம்
14 ஜுன் 2024